தினமணி

துவரையில் நாற்றுவிட்டு நடவுமுறை மேற்கொள்ள மானியம்

First Published : 03 Aug 2012 09:19:39 AM IST

திண்டுக்கல், ஆக. 2: துவரைப் பயிரில் நாற்றுவிட்டு நடவு முறை மேற்கொள்ள அரசு மானியம் வழங்க உள்ளதாக ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை.

பொதுவாக துவரைப் பயிர் சாலில் விதைப்பு செய்து ஊடுபயிர்களில் ஒன்றாகப் பராமரித்து குறைந்த மகசூல் எடுப்பது என்பது வழக்கம். இதனைக் கருத்தில் கொண்டு அரசு இந்த ஆண்டு துவரைப் பயிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதிக பரப்பில் சாகுபடி செய்து துவரையைத் தனி பயிராக ஊக்குவித்து அதிக மகசூல் எடுக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி, நெல் சாகுபடி செய்வதைப் போல புதிய தொழில்நுட்பம் மூலம் துவரையை நாற்றுவிட்டு பின்னர் 20 தினங்கள் கழித்து 5 அடிக்கு 3 அடி என்ற இடைவெளியில் தனிப் பயிராகச் சாகுபடி செய்து, அதில் அதிக மகசூல் எடுக்க வழி கண்டுள்ளது. இதன்

அடிப்படையில் இந்த ஆண்டு நாற்று முறை விட்டு நடவு செய்து தனிப் பயிர் துவரை செயல் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ.7,500 மற்றும் ரூ.15,000 மானியம் வழங்க உள்ளது.

ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரை அணுகி உரிய ஆவணங்களை ஒப்படைத்தால் மூதுரிமை அடிப்படையில் மானியம் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

சிறந்த கறவை மாடுகளைத் தேர்வு செய்வது எப்படி?

First Published : 02 Aug 2012 12:21:40 PM IST

நாமக்கல்: பால் மற்றும் பால் பொருள்களின் தேவை அதிகரித்து வருவதால், கால்நடை வளர்ப்பில் பால் பண்ணைத் தொழிலுக்கு முக்கியத்துவ ம் அதிகரித்து வருகிறது. அதன்படி, பால் பண்ணைத்

தொழிலை லாபகரமாக செயல்படுத்த சிறந்த கறவை மாடுகளைத் தேர்வு செய்வது குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி நிர்வாகம் பல்வேறு வழிமுறைகளை தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்தக் கல்லூரியின் விரிவாக்கத் துறை பேராசிரியர்கள் நா.நர்மதா, வே.உமா, மொ.சக்திவேல் ஆகியோர் கூறியது:

பால் பண்ணைத் தொடங்க முதலில் நல்ல கறவை மாடுகளைத் தேர்வு செய்தல் வேண்டும். அதற்கு கறவை மாடுகள் குறித்த அடிப்படை விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

கறவை மாடுகள் வாங்கும் போது பதிவேடுகளை நன்கு பராமரித்து வரும் அரசு கால்நடைப் பண்ணைகள், தனியார் பண்ணைகளிலிருந்து பசுக்களைத் தேர்வு செய்வது சிறந்தது.

ஏனெனில் அந்தப் பதிவேடுகளில் பிறந்த தேதி, கன்று ஈன்ற தேதி, கறவைக் காலம், கொடுத்த பாலின் அளவு போன்ற விவரங்கள் குறித்து வைக்கப்பட்டிருக்கும். அதன்படி, பதிவேடுகள் மூலம் ஆண்டுக்கு ஒரு கன்று, அதிகப் பால் உற்பத்தித் திறன் உள்ள பசுக்களைத் தேர்வு செய்யலாம். பதிவேடுகள் என்பது பெரும்பாலும் ஏட்டளவிலேயே உள்ளன. இந்தச் சூழலில் மாடுகளின் தோற்றத்தைக் கொண்டும் அவற்றின் குணாதிசயங்கள் கொண்டும் பசுக்களை தீர்மானிக்கலாம். அதாவது, பசுவின் அமைப்புக்கும், அதன் உற்பத்தித் திறனுக்கும் ஓரளவு தொடர்பு உள்ளதென ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன.

பசுவானது சுறுசுறுப்பாகவும், கண்கள் பிரகாசமாகவும், கருவிழி நன்கு அசையும் வண்ணமும் இருக்க வேண்டும். மூக்கின் முன்பகுதி ஈரமாக இருக்கவும், மூக்குத் துவாரங்கள் பெரியதாகவும் அகன்றும் இருக்க வேண்டும். மூச்சு விடும் போதோ அல்லது உள்ளிழுக்கும் போதோ குறட்டைச் சப்தம் வரக்கூடாது.

பல் வரிசை சீராக இருப்பதைக் கடைவாய்ப் பல்கள் அனைத்தையும் வாயைத் திறந்து நாக்கை விலக்கிப் பார்த்தல் வேண்டும். அதிக தேய்மானம், சொத்தைப் பல், புண் மற்றும் துர்நாற்றம் இருக்கக் கூடாது. மாடுகள் ஓய்வு நேரங்களில் அசை போட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

பசுவை பக்கவாட்டில் இருந்து பார்க்கையில் முன்னங்காலின் பகுதியைவிட பின்னங்கால் பகுதியில் உடலளவு பெரிதாக இருந்தால் தீவனத்தை நன்கு உள்கொண்டு பாலாக மாற்றும் திறன் உடையது என்று அனுமானிக்கலாம்.

பசுவின் மேல் பகுதியைப் பார்க்கையில் முன்னங்கால் பகுதியிலிருந்து இரு பக்க இடுப்பு எலும்பு வரையில் வரும் நேர்க்கோட்டில் இரு பக்கமும் விரிவடைந்திருக்க வேண்டும். அதன்படி, இடுப்பு எலும்பு அகலமாக இருப்பதால் இனப்பெருக்க உறுப்புகள் சிறப்பாக வளர்ந்திருக்கும், கன்று போடுவதில் எந்த சிரமமும் இருக்காது.

கறவை மாடுகள் அதிக கொழுப்புடனோ அல்லது அதிகமாக மெலிந்தோ இருக்கக் கூடாது.

கறவை மாடுகளின் விலா எலும்புகளில் கடைசி மூன்று எலும்புகள் மட்டும் தெரிவது சிறந்ததாகும்.

கால்கள் உறுதியாகவும், நடக்கும் போது சீராக ஊன்றியும் நடக்க வேண்டும். பசுவின் நான்கு கால்களும் உடம்பின் நான்கு மூலையிருந்து நேராக தரையை நோக்கி இறங்கியிருக்கவும், பசு படுப்பதற்கோ எழுவதற்கோ சிரமப்படக் கூடாது.
மடியின் நான்குக் காம்புகளும் ஒரே அளவாகவும், சரிசமமாகவும், காம்புகளின் நுனியில் பால் வரும் துவாரம் இருக்க வேண்டும். காம்புகள் அதிக நீளமாகவும் இருக்கக் கூடாது. தவிர, பால் மடியானது உடலோடு நன்கு ஒட்டியிருக்கவும், மடி உடலோடு சேரும் பகுதி அகன்று விரிந்தும் அடிவயிற்றில் நன்கு திரண்டும் இருக்க வேண்டும்.
பால் கரந்த பிறகு மடி நன்கு சுருங்க வேண்டும். மாட்டின் கலப்பினத் தன்மைக்கேற்ப கணக்கிடப்பட்ட அளவுக்குப் பால் கறக்க வேண்டும். அதற்கு தொடர்ந்து மூன்று நாள்கள் இரு வேளையும் பால் கறந்துப் பார்த்து மாடுகளை வாங்க வேண்டும். பத்து லிட்டர் பாலை எட்டு நிமிஷங்களில் கறக்க வேண்டும்.
பால் கறக்கும் போது கால்களைக் கட்டியோ அல்லது மாடுகளைப் பிடித்துக் கொண்டோ கறக்கும் பழக்கமுள்ள மாடுகளை வாங்குவது நல்லதல்ல. மேலும், மாடுகள் முதல் கன்று ஈற்றைவிட இரண்டாவது, மூன்றாவது ஈற்றில்தான் அதிகமாக பால் கொடுக்கும். எனவே, மாடுகளை முதல் மூன்று ஈற்று இருக்குமாறு பார்த்து வாங்குவது சிறந்தது என்றனர் அவர்கள்.

## சுழற்சி முறையில் பயிர் சாகுபடிக்கான தேர்வு முறைகள்!

First Published : 02 Aug 2012 12:21:13 PM IST

தருமபுரி: விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான பயிரை சாகுபடி செய்வதைத் தவிர்த்து, சுழற்சி முறையில் பயிர்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்தால் கூடுதல் மகசூலும், அதிக லாபமும் பெறலாம்.
பயறு வகைகளுக்குப் பிறகு: பயறு வகைகள் பயிரிடும் விவசாயிகள் அதன் பிறகு பயறு அல்லாது வேறு பயிர்களை தேர்வு செய்ய வேண்டும் கோதுமை, மக்காச் சோளம், முதலில் செய்த பயிர் அல்லது தானியங்களை ஊடுபயிராக பயிரிடலாம்.
சில வகைப் பயிர்கள் மண்ணில் உள்ள சத்துகள் அனைத்தையும் உறஞ்சிவிடும் தன்மை கொண்டவை. எள், கடலை ஆகியவை இத்தகையத் தன்மை கொண்டவை. எனவே, இத்தகையப் பயிர்களைப் பயிரிட்ட பிறகு பயறு வகைகளைப் பயிரிட்டால் சத்துக்களை மண்ணில் நிலை நிறுத்தும்.
அவ்வப்போது இலைகள் ண்ணில் உதிரும் வண்ணம் உள்ள செடிகளையும் பயிரிடலாம். பருத்தி, நெல், கோதுமை, பயறு வகைகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்.
தானியப் பயிர்களுக்குப் பிறகு: மானாவாரியாகவோ, இறவைப் பயிராகவோ தானியங்களை பயிரிடும் விவசாயிகள், தானிய விளைச்சலுக்குப் பிறகு பசுந்தாள் உரத் தாவரங்களைப்

பயிரிடலாம். சனப்பை, நெல், துவரம் பருப்பு, பச்சைப் பயறு, மக்காச்சோளம் ஆகியவற்றைத் தேர்வு செய்யலாம். நல்ல அதிக ஊட்டச்சத்து தேவையுடைய பயிர்களுக்குப் பிறகு குறைந்த ஊட்டச்சத்து தேவையுடைய பயிர்களைப் பயிரிட வேண்டியது அவசியம். மக்காச் சோளம், உளுந்து, பூசணி வகைகளை சாகுபடி செய்யலாம்.

பருவம் சார்ந்தவை: பருவம் சார்ந்த பயிர்களை பயிரிட்ட பிறகு ஓராண்டுக்கு தாவரங்களைப் பயிரிட வேண்டும். நேப்பியர், கரும்பு பயிரிட்ட பிறகு நிலக்கடலை, தட்டைப் பயறு பயிரிடலாம். காய்கறி வகைகளை சாகுபடி செய்த பிறகு தீவனப் பயிர்களைப் பயிரிடலாம். சோளம், தட்டைப் பயறு, உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், வெங்காயம் என சுழற்சி முறையில் பயிர் செய்தால் கூடுதல் வருவாய் கிடைக்கும். விதைத் தவாரங்களுக்குப் பிறகு வேர்த் தாவரங்களைப் பயிரிடலாம்.

மறுதாம்புப் பயிர்களுக்குப் பிறகு ஆழமான வேர்கள் செல்லக் கூடிய பயிர்களை சாகுபடி செய்யலாம். உருளைக் கிழங்கு, மஞ்சள், பீட்ரூட், கேரட், நெல், வெங்காயம், காய்கறி என சுழற்சி முறையை கடைப்பிடிக்கலாம்.

ஆழமான வேர்களைத தொடர்ந்து மேலோட்டமான வேருள்ல பயிர்களை விதைக்கலாம். இதற்கு பருத்தி, ஆமணக்கு, துவரம்பருப்பு, உருளைக் கிழங்கு, பச்சைப் பயறுகள் சிறந்தவை.

கோடை உழவுக்குப் பிறகு: அதிக ஆழமான உழவு தேவைப்படும் பயிர்களை, கோடை உழவு முடிந்த பின்னர் சாகுபடி செய்வது அவசியம். சற்று இறுகிய மண்ணிலும் வளரக் கூடிய தாவரங்களைப் பயிரிடலாம். உருளைக் கிழங்கு, முள்ளங்கி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, கரும்பு, உளுந்து, பசுந்தாள் உரம் என சுழற்சி முறையில் வகைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரு விதையிலைத் தவாரங்களை சாகுபடி செய்த விவசாயிகள் அடுத்தபடியாக ஒரு விதையிலைத் தாவரங்களைப் பியிரட வேண்டும். ஊடுபயிர் இல்லாத தனிப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் அரிதாள் கட்டை விடும் பயிர்களை சாகுபடி செய்வது சிறந்தது.

பூச்சித் தாக்குதலில் இருந்து காக்க: சில வகை பூச்சிகள் குறிப்பிட்ட பயிர்களைத் தாக்கும் ஆற்றல் கொண்டவை. எனவே, அத்தகையப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகள் அடுத்த முறை அதற்கு மாற்றாக உள்ள பயிர்களைத் தேர்வு செய்ய வேண்டும். சில பயிர்களில் குறிப்பிட்ட வகை களைச் செடிகள் தொர்ந்து முளைத்த வண்ணம் இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த சுழற்சி முறை பயிர் சாகுபடி அவசியமானது. மேய்ச்சல் பயிர்களுக்குப் பிறகு தீவனம் அல்லது விதைப் பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும் பாராபுல், சோளம், அவரை, நெல் என வரிசைப்படுத்திக் கொள்ளலாம். சுத்தப்படுத்தும் தாவரங்களுக்குப் பிறகு விதைத் தாவரங்களை தேர்வு செய்ய வேண்டும். மக்காச் சோளம், நிலக்கடலை, வெங்காயம், அவரை, கம்பு என திட்டமிடல் வேண்டும். ஒரே வகை பயிர்களை சாகுபடி செய்யாமல் மேற்கண்டபடி சுழற்சி முறையில் பயிர்களை சாகுபடி செய்தால் விவசாயிகளுக்கு மிகுந்த லாபத்தை ஈட்டித் தரும். மண் வளமும் பாதுகாக்கப்படும். மேலும்,

விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

உளுந்தில் அதிக மகசூல்: அண்ணாமலைப் பல்கலை. பேராசிரியர் சாதனை
First Published : 02 Aug 2012 09:45:51 AM IST

சிதம்பரம், ஆக.1: கடல் பாசியிலிருந்து தயாரிக்கப்பட்ட திரவ உரத்தைப் பயன்படுத்தி உளுந்து பயிர் அதிக மகசூலுடன் கூடுதல் தரத்தில் உற்பத்தி செய்ய முடியும் என சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் மு.சிவக்குமார் ஆய்வு செய்து சாதனை படைத்துள்ளார்.
ஜூலை மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 8-வது பசிபிக் ஆசிய கடல்பாசிகள் பற்றிய உயிர்-தொழில்நுட்பவியல் மாநாட்டில் பங்கேற்று மேற்கண்ட ஆய்வுக்கட்டுரையை சிவக்குமார் சமர்ப்பித்துள்ளார். இதுகுறித்து இணைப் பேராசிரியர் மு.சிவக்குமார் தெரிவித்தது:
விவசாயத்தில் பச்சை கடல்பாசிகள் பெரும் பங்கு வகிக்கிறது. இதைப் பயன்படுத்தி ரசாயன உரத்துக்கு மாற்றாக சுற்றுச்சூழல் மற்றும் மண்ணை மாசுபடுதலில் இருந்து காப்பாற்றி இயற்கையோடு இணைந்த பயிர் உற்பத்தி செய்திட முடியும். தனது ஆராய்ச்சியில் மின்னணு நுண்ணோக்கி மற்றும் அதி நவீன சக்திவாய்ந்த நிழல் உருவ கருவியின் மூலம் இலைத் துளிகளிலுள்ள தாதுப் பொருள்களின் அளவு மற்றும் அதன் பகிர்மாணம் பச்சைப் பாசி திரவ உரத்தை பயன்படுத்தும்போது வேறுபடுவதை கண்டறிந்துள்ளோம். மேலும் பச்சைப் பாசிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆல்வா ரெட்டிக்குலேட்டா இனம், குறிப்பாக தமிழக கடல் பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கிறது.
இந்தப் பாசியை திரவ உர தயாரிப்பில் அதிகமாக பயன்படுத்த முடியும். இந்த கடல்பாசி திரவ உரத்தை பயிரின் மேல் தெளிக்கும்போது பயிரின் பூச்சி, பூஞ்சாண நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது. தரமான மகசூல் கிடைக்கின்றது. மேலும் ரசாயன இடுப்பொருள்கள்போல் அல்லாமல் மண்ணுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் விஷத் தன்மையற்ற ஒரு சுற்றுப்புற சூழலை உருவாக்க உறுதுணையாக உள்ளது. விவசாயிகள் இந்த கடல்பாசி திரவ உரத்தை எளிமையான முறையில் சொந்தமாகத் தயாரித்துப் பயன்படுத்த முடியும் என க.சிவக்குமார் தெரிவித்தார்.
8-வது பசிபிக் ஆசிய மாநாட்டில் பங்கேற்று மேற்கண்ட ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்துள்ள இணைப் பேராசிரியர் மு.சிவக்குமாருக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் எம்.ராமநாதன், பதிவாளர் ஆர்.மீனாட்சிசுந்தரம் மற்றும் புல முதல்வர் ஆகியோர் அண்மையில் பாராட்டு தெரிவித்தனர்.

விலையில்லா கறவை மாடுகளை அமைச்சர் ஆய்வு

First Published : 02 Aug 2012 10:02:36 AM IST

ஸ்ரீபெரும்புதூர், ஆக. 1: கீவளூர், பாப்பாங்குழி கிராமங்களில் அரசால் வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகளை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் சின்னைய்யா புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கீவளூர் ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகளை அவர் ஆய்வு செய்தார். பின்னர், பாப்பாங்குழி பகுதியில் 55 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடுகளை அவர் ஆய்வு செய்தார்.

அவை முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறதா, ஏதேனும் நோய் தொற்று உள்ளதாக என கால்நடை துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அமைச்சருடன் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் தர்மேந்திரபிரசாத் யாதவ், ஸ்ரீபெரும்புதூர் சட்டப்பேரவை உறுப்பினர் மொளச்சூர் ரா.பெருமாள், அதிமுக ஒன்றியச் செயலாளர் போந்தூர் செந்தில்ராஜன், ஒன்றிய கவுன்சிலர்கள் பாபு, பாலமுருகன், கால்நடை மருத்துவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**மக்காச்சோளம் குறைந்தபட்ச விலையை ஒட்டி இருக்கும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2012,01:45 IST

கருத்தை பதிவு செய்ய

சிறுபாக்கம் : ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு தேவை காரணங்களால் மக்காச் சோள விலை குறைந்தபட்ச விலையை ஒட்டியே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குனர் தனவேல் மற்றும் விருத்தாசலம் கோட்ட வேளாண் அலுவலர் அமுதா ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நல்லூர், மங்களூர் வட்டாரங்களில் ஆடிப்பட்டம் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகின்றன.

நடப்பாண்டில் மாநில அளவில் முதிர்ந்த மக்காச்சோள பயிர் வரத்து காலமான ஏப்ரல் முதல் ஜூன் வரை தமிழ் நாட்டில் குவிண்டாலுக்கு 1,200 ரூபாய்க்குள் இருந்தது.

கர்நாடகாவிலிருந்து ஆகஸ்ட் மாத இறுதியில் புதிய மக்காச்சோளம் வரத்தொடங்கும். அதுவரை

விலை குவிண்டாலுக்கு 1,100 லிருந்து 1,150 வரை இருக்கும். மக்காச்சோளத்திற்கான குறைந்த பட்ச ஆதார விலையை இந்திய அரசு நடப்பு காரிப்பருவத்தில் குவிண்டாலுக்கு 980 ரூபாயிலிருந்து 1,175 ரூபாயாக உயர்த்தியுள்ளது.
இந்நிலையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை, தகவல் மையம், உடுமலை சந்தையில் கடந்த 18 ஆண்டுகள் நிலவிய மக்காச்சோள விலை குறித்த ஆய்வுகளின்படி அக்டோபர் முதல் டிசம்பர் 2012 வரை மக்காச்சோளம் குவிண்டாலுக்கு 1,100 ரூபாய் முதல் 1,150 ரூபாய் வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஏற்றுமதி மற்றும் உள் நாட்டு தேவை ஆகிய காரணங்களால் மக்காச் சோள விலை குறைந்தபட்ச விலையை ஒட்டியே இருக்கும். இதனை விவசாயிகள் பயன்படுத் திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## விதை உற்பத்தி பயிற்சி கூட்டம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2012,04:46 IST

நாமக்கல்: ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலக கூட்ட அரங்கில், விதை உற்பத்தி மற்றும் விதைச்சான்று குறித்த பயிற்சிக் கூட்டம் நடந்தது.நாமக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) நடராஜன் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) முரளிதரன் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில், விதை உற்பத்தி, நோய் தாக்குதலிருந்து பாதுகாப்பது மற்றும் கருவிதை, வல்லுநர் விதை, ஆதார விதை, சான்று விதை உற்பத்தி செய்வது, அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கி கூறப்பட்டது. மேலும், விதை சான்றளிப்பு, விதையின் வகைகள், அங்கச்சான்றளிப்பு குறித்து விளக்கப்பட்டது.விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் ராமச்சந்திரன், ராமசாமி விதைச்சான்று அலுவலர் கந்தசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## சோயா, மக்காச்சோளம் ஏற்றுமதிக்கு தடை விதிக்க என்.இ.சி.சி., கோரிக்கை

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2012,04:39 IST

நாமக்கல்: "கோழித்தீவன மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தை தவிர்க்க, சோயா, மக்காச்சோளம் ஏற்றுமதிக்கு மத்திய அரசு முழுமையாக தடைவிதிக்க வேண்டும்' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் (என்.இ.சி.சி.,) நாமக்கல் மண்டல சேர்மன் டாக்டர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:

கோழித்தீவன மூலப்பொருட்களின் விலையேற்றத்தை ஈடுகட்டும் வகையில் முட்டை விலை உயர்த்துவது குறித்து, என்.இ.சி.சி., கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அப்போது, 30 ஆண்டுகளில் இல்லாத வகையில், தீவனப் மூலப்பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. அதிப்படியான நஷ்டம் ஏற்பட்டு கோழிப்பண்ணைகள் நடத்துவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, 225 காசாக இருந்த முட்டை உற்பத்தி செலவு தற்போது, 300 காசுகளாக உயர்ந்துள்ளது. தற்போது, முட்டை விலை 280 காசுகளாக இருந்த போதும் போக்குவரத்து செலவு உள்ளிட்ட காரணங்களுக்காக, 20 பைசா முதல் 25 பைசா வரை குறைத்து, 255 முதல் 260 காசுகள் வரை வியபாரிகளுக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

அதனால், பண்ணையாளர்களுக்கு 40 முதல் 45 காசுகள் வரை முட்டை விலையில் நஷ்டம் ஏற்படுகிறது. வட மாநிலத்தில் ஸ்ராவன் பண்டிகை முடிவடைந்ததையடுத்து புதுடில்லி, பார்வாலா, கொல்கத்தா ஆகிய இடங்களில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது. அதன்காரணமாக புதுடில்லியில் 9 காசுகளும், பார்வாலாவில் 11 காசுகளும் மற்றும் கொல்கத்தாவில் 16 காசுகளும் உயர்த்தப்பட்டன.

தமிழகத்தில், ஆடி பதினெட்டு பண்டிகை முடிந்தையடுத்து முட்டை நுகர்வு அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஏற்றுமதி கொள்கை மற்றும் செயற்கையான தட்டுப்பாடு காரணமாக, கோழித் தீவன மூலப்பொருட்கள் கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றத்தை தவிர்க்க சோயா, மக்காச்சோளம் ஏற்றுமதிக்கு மத்திய அரசு முழுமையாக தடைவிதிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒப்பந்த கோலியஸ் சாகுபடி துவக்க விழா கருத்தரங்கம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2012,04:35 IST

நாமக்கல்: நாமக்கல் மாவட்டம், பவித்திரத்தில் ஆத்தூர் மஞ்சினி எம்.ஜி.பி., அன்னை பசுமை பூமி உழவர்கள் கூட்டமைப்பு சார்பில், 17ம் ஆண்டு நாமக்கல் மற்றும் திருச்சி மேற்கு மாவட்ட ஒப்பந்த கோலியஸ் சாகுபடி துவக்க விழா கருத்தரங்கம் நடந்தது.திருச்செங்கோடு சார்பு நீதிமன்ற நீதிபதி தலைமை வகித்தார்.எம்.ஜி.பி., அன்னை பசுமை பூமி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் அக்ரி பழனிவேல் பேசியதாவது:இந்த ஆண்டு, 6,000 உழவர்கள், 1,000 வேளாண் தொழிலாளர்கள், 200 பணியாளர்கள் நேரடியாகவும், 3,000க்கும் மேற்பட்டோர் மறைமுகமாகவும் பயன்பெறுவர். எம்.ஜி.பி., நிறுவனம், 16 ஆண்டு காலம் ஒப்பந்த சாகுபடியில் நிறைய புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தி, உழவர்களுக்கு பாதுகாப்பாகவும், நாணயமாகவும்

செயல்பட்டு வருகிறது.விவசாயிகளின் தகுதிகளை மேம்படுத்த அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து, இரண்டு கோடி ரூபாய் முதலீட்டில், வேளாண் வர்த்தக பயிற்சி மையம் கடலூர் மாவட்டத்தில் அமைக்க உள்ளோம். இதன் மூலம் உழவர்களை ஏற்றுமதி சந்தைக்கு தயார் செய்து, தரமிக்க பொருட்களை உற்பத்தி செய்து, நல்ல லாபம் ஈட்ட வழிகாட்டப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கோலியஸ் சாகுபடியில் நல்ல லாபம் ஈட்டி வரும் விவசாயிகள் பழனிசாமி, ராமசாமி, ஆணைக்குட்டி, துரைசாமி, சுப்ரமணி, செல்வம் ஆகியோர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். பேராசிரியர் நளினி, கொடைக்கானல் சாந்தி எழுதிய "கொடைக்கானல் தேவைகளின் தேசம்' என்ற சுற்றுச்சூழல் நூலை வெளியிட்டு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினார்.

சென்னை மாநகர எஸ்.பி.,ரவிச்சந்திரன், கொடைக்கானல் சாந்தி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் திருச்சி கோட்ட மேலாளர் சம்பத்குமார், கூட்டமைப்பு அறங்காவலர் வரதராஜன், சிவகுருநாதன், மக்கள் தொடர்பு அலுவலர் சின்னதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை மாவட்ட பொறுப்பாளர்கள் லோகேஷ்குமார், மணிவேல், குப்புசாமி, அப்பாவு, ஆனந்தகுமார் ஆகியோர் செய்தனர்.

## சிறு தானிய விதை உற்பத்திக்கு ரூ.73 லட்சம் நிதி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 03,2012,05:45 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், சிறு தானிய விதை உற்பத்திக்கு, 73 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், பயிர் செய்யப்படும் சிறு தானிய பயிர்களில் சாமை பிரதானமாக, 15 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, ஹெக்டேருக்கு ஆயிரத்து 250 கிலோ வீதம் மகசூல் எடுக்கப்பட்டு வந்தது. கடந்தாண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தீவிர சிறு தானிய சாகுபடி வாயிலாக ஊட்டச்சத்து பாதுகாப்பு ஏற்படுத்தல் திட்டத்தின் மூலம், 2,000 ரூபாய் மதிப்பில் சான்று பெற்ற உயர் விளைச்சல் ரகம் (கோ 4) விதை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உரங்கள் ஆகிய இடு பொருட்கள் மானியமாக வழங்கப்பட்டது.உரிய தருணத்தில் தொழில் நுட்ப உதவியாளர்கள் மூலம் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் ஹெக்டேருக்கு அதிகபட்சமாக, 2,150 கிலோ மகசூல் எடுக்கப்பட்டது. ஊட்டசத்து பாதுகாப்பில், சிறு தானியங்கள் முக்கியத்துவத்தை உணர்ந்த மத்திய அரசு சிறு தானியங்களில் சாகுபடியை மேலும் விரிவுப்படுத்தும் பொருட்டு, இத்திட்ட பயனை அதிகப்படியான விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கும் விதமாக நடப்பாண்டு தர்மபுரி மாவட்டத்தில் இத்திட்ட செயல் விளக்க திடல்கள் அமைக்க நடவடிக்கை

எடுத்துள்ளது.சாமை வரகு, பனி வரகு, குதிரைவாலி மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானியங்களின் விதை உற்பத்திக்காக அரசு, 73 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 2,000 ரூபாய் மானிய மதிப்பில் சான்று பெற்ற உயர் விளைச்சல் ரக விதை உரங்கள் வினியோகிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வட்டாரத்தில், 100 விவசாயிகள் வீதம், எட்டு வட்டாரங்களில், 800 விவசாயிகளுக்கு சிறு தானியங்களில் நவீன சாகுபடி தொழில் நுட்பங்கள், மதிப்பூட்டப்பட்ட உணவு பொருட்கள் தயாரிப்பு முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்க, 40 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

---

தினகரன்

டீ, காபி விலை உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-08-03 10:00:36

கரூர், : கரூரில் டீ, காபி விலை உயர்ந்துள்ளது.

கரூர் பகுதியில் டீ, காபி விலை கடந்த சில மாதங்களுக்கு முன்பு உயர்த்தப்பட்டது. டீ ரூ.5ல் இருந்து ரூ.6 ஆகவும், காபி ரூ.8ல் இருந்து ரூ.9 ஆகவும் உயர்ந்தது. இந்நிலையில் மீண்டும் டீ, காபி விலை உயர்ந்துவிட்டது. டீ ரூ.7, காபி ரூ.10ஆகி விட்டது. சர்க்கரை விலை உயர்வு மற்றும் சிலிண்டர் தடுப்பாடு காரணமாகவும் விலையை உயர்த்தியுள்ளதாக கடைக்காராகள் தெரிவித்தனர். சில கடைகளில் டீ விலை 8க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சர்க்கரை கிலோ ரூ.32, ரூ.33 என்ற விலையில் இருந்தது.

தற்போது விலை கிலோவுக்கு ரூ.3.30 உயர்ந்துவிட்டது. கிலோ சர்க்கரை ரூ.36.50 விலையில் விற்பனை செய்யப்படுகிறது, இந்த விலை உயர்வு காரணமாகவே டீ, காபி விலை உயர்ந்துள்ளது என தெரிவித்தனர். சர்க்கரை விலை உயர்ந்தால் மேலும் டீ, காபி விலை உயர்வதற்கு வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## குறுவை பயிரை பாதுகாக்கும் முறை விவசாயிகளுக்கு அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-08-02 14:08:45

மன்னார்குடி, : திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் உத்திராபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஆழ்குழாய் கிணறு வசதியுள்ள விவசாயிகள் குறு வை சாகுபடி செய்துள்ளனர். நெல் நடவு செய்த விவசாயிகள், மேல் உரம் இடுவதற்கு முதல் நாள் 5 கிலோ யூரியா, 4 கிலோ ஜிப்சம், ஒரு கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்து வைத்து மறுநாள் உரமிடவேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து 15 நாள் கழித்து கோனோவீடர் கருவி மூலம் களையெடுத்து உரமிடுவது நல்லது. மணி திரட்சியாக இருக்க ஏக்கருக்கு 10 கிலோ நுண்ணூட்ட சத்து இட வேண்டும். பூச்சி நோய் தாக்காமல் இருக்க பறவை குடில் அமைத்து பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் உத்திராபதி தெரிவித்துள்ளார்.

## தினமும் மீன் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-03 09:59:46

கரூர், : தொழில் நகரமான கரூரில் வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மற்றும் விசேஷ நாட்களில் அசைவ வகையை சேர்ந்த மீன், ஆட்டுக்கறி, கோழிக்கறி, பிராய்லர் விற்பனை அதிகளவு இருக்கும். கொச்சி, புதுக்கோட்டை போன்ற கடலோர பகுதிகளில் இருந்து கரூருக்கு கடல் மீன்கள் வருகின்றன. மேலும், மீன்களின் தேவையை அதிகளவு பூர்த்தி செய்யும் விதத்தில், மேட்டூர், பவானி சாகர் டேம் மற்றும் ஈரோடு மற்றும் மாயனூர் பகுதிகளில் உள்ள பண்ணைகள் ஆகியவற்றில் இருந்து ரோகு, கட்லா, மிருகாள், நெய்மீன் போன்ற வளர்ப்பு மீன்களின் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.சீசனுக்கு ஏற்ப, கடல் மீன்களின் விலையில் பல்வேறு மாற்றங்கள் வருவது போல, எப்போதும் கிடைக்கும் வளர்ப்பு மீன்களும் தற்போது அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது. கட்லா மீன் ஒரு கிலோ தற்போது 130க்கும், ரோகு மீன் ஒரு கிலோ ரூ.110க்கும், நெய்மீன் ஒரு கிலோ ரூ.120க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மீன்களின் விலை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வரை விலை குறைந்து காணப்பட்டது.தற்போது மீன்களின் அதிகப்படியான தேவை காரணமாக டேம் மீன்களும் அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது.